**<u>சுருக்கம்</u>**

சிறப்பு பொது விநியோகத் திட்டம்–துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு, பாமாயில், ரவை மற்றும் மைதா ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகம்–தொடர்ந்து செயல்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (டி1) துறை**

**அரசாணை (நிலை) எண்.37** **நாள்: 29.03.2010**
**பங்குனி – 15**
**திருவள்ளுவராண்டு 2041**

**<u>படிக்க:-</u>**

1. அரசாணை (நிலை) எண்.106, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள்.4.4.2007
2. அரசாணை (நிலை) எண்.141, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள்.2.5.2007
3. அரசாணை (நிலை) எண்.201, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள்.20.6.2007
4. அரசாணை (நிலை) எண்.266, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள்.30.8.2007
5. அரசாணை (நிலை) எண்.147, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள்.30.7.2008
6. அரசாணை (நிலை) எண்.167 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள்.26.9.2008
7. அரசாணை (நிலை) எண்.89 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள்.27.7.2009
8. அரசாணை (நிலை) எண்.152 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள்.29.9.2009
9. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கடிதம் எண். உ3/13051/07 நாள். 3.10

---

**<u>ஆணை</u>:-**

வெளிச்சந்தையில் பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா ஆகியவற்றின் விலை உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இப்பொருட்களை அரசே தமிழ்நாடு

நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு முடிவு செய்தது. இத்திட்டத்தினை, சென்னை மாநகரில் 14.04.2007 முதல் செயல்படுத்த பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. பின்னர் 01.05.2007 முதல் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. வெளிச்சந்தை விலையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தொடங்கப்பட்ட இத்திட்டம் 31.03.2010 வரை நீட்டித்து பார்வை 8ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. மேலும், 6ல் படிக்கப்பட்ட அரசாணையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திலும் ஏழை எளிய நடுத்தர மக்களை விலைவாசி ஏற்றத்தின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும்பொருட்டும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அன்றாட சமையலுக்குத் தேவையான மிளகாய்த்தூள், மல்லித்தூள், கடுகு, சீரகம் உட்பட 10 மளிகைப் பொருட்கள் ரூ.50 என்ற மானிய விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு 2.10.2008 முதல் விற்பனை செய்வதற்கு தக்க ஆணைகள் வெளியிடப்பட்டது.

3. மேலே 9ல் படிக்கப்பட்ட கடிதத்தில் சிறப்புப் பொதுவிநியோகத் திட்டத்தை 31.03.2010க்குப் பிறகு தொடர்ந்து செயல்படுத்துவது குறித்து கருத்து தெரிவிக்கையில், மக்களிடம் குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகளிடம் ஊட்டச்சத்து குறைவினால் ஏற்படும் இரத்தசோகை நோயினை கட்டுப்படுத்தும் நோக்குடன், கோதுமையிலிருந்து மாவு அரைவை செய்து செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக (ஆட்டா) பிப்ரவரி 2008 முதல் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கோதுமை மாவு செறிவூட்டப்பட்டது போன்று மைதாவும், பாமாயிலும் செறிவூட்டப்பட்டு ஆகஸ்ட் 2009 முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அத்தியாவசியப் பொருட்களின் வெளிச்சந்தை விலை மிக அதிகமாக உள்ள காரணத்தாலும் ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை பெரிதும் நம்பியுள்ளதாலும் 1,95,56,944 (N குடும்ப அட்டை நீங்கலாக) குடும்ப அட்டைதாரர்கள் இத்திட்டத்தின் வாயிலாக சிறப்பான முறையில் பெரும் பயன் அடைந்துவரும் சூழ்நிலையில் இச்சிறப்பு பொது விநியோகத் திட்டத்தினை 31.03.2010க்குப் பின்னரும், அதாவது 01.04.2010 முதல் 30.6.2011 வரை நீட்டிப்பதற்கு அரசின் ஆணை வழங்குமாறு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இத்திட்டம் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில், தற்போது நிலவிவரும் பருப்பு வகைகளின் விலையைக் கருத்தில் கொண்டும், ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலனைக் கருத்தில்கொண்டும், தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தினை 1.4.2010 முதல் 30.6.2011 வரை நீட்டிக்கலாம் எனவும், 10 மளிகைப் பொருட்கள் அடங்கிய ஒரு பொட்டலம் ரூ.50 என்ற மானிய விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தொடர்ந்து வழங்கலாம் எனவும் அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் கண்ட ஆணைகளை செயல்படுத்துமாறு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.655/FS/P/2010, நாள் 09.03.2010 ல் பெற்ற ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. சண்முகம்,
அரசு முதன்மை செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,
சென்னை–5
நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–10
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
நிதி அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை–9
துணை முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
உணவு அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை–9
<u>நகல்</u>
நிதித்துறை, சென்னை–9
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.